### நினைவு நாளில் திராவிட மாடல் அரசின் சார்பில்

# வ.உ.சி.யின் தியாகத்தை வணங்கிப் போற்றுகிறேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!



**சென்னை, நவ. 19 -**

**“செக்கிழுத்த செம்மல் வ.உ.சி. அவர்களின் நினைவு நாளையொட்டி அவரை வணங்கிப் போற்றுகிறேன்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார்.**

செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம் பரனார் அவர்களின் நினைவு நாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**திராவிட மாடல் அரசும் வ.உ.சிதம்பரனாரும்...**

**• கப்பலோட்டிய தமிழரின் 150 ஆவது பிறந்தநாள் பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டது!**

**• வ.உ.சி. பெயரில் 5 லட்சம் ரூபாய் பரிசுத்தொகையுடன் சிறப்பு விருது அறிவிப்பு!**

**• கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் வ.உ.சி. அவர்களின் சிலை திறப்பு மற்றும் அவர் சிறையில் இழுத்த செக்கு பொலிவூட்டப் ப்பட்டது!**

**• கோவை வ.உ.சி. பூங்காவில் திருவுருவச் சிலை திறப்பு!**

**• வ.உ.சி. அவர்களின் 150 ஆவது ஆண்டில் நெல்லை, தூத்துக்குடியில் உருவாகும் அனைத்துக் கட்டடங்களுக்கும் அவரது பெயர் சூட்டல்!**

**• வ.உ.சி. அவர்களின் 85 ஆவது நினைவு நாள் ‘தியாகத் திருநாள்’!**

**• தூத்துக்குடி மேற்கு பெரிய காட்டன் சாலை வ.உ.சி. சாலை எனப் பெயர் மாற்றம்!**

**• வ.உ.சி. அவர்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் நகரும் புகைப்படக் கண்காட்சி!**

**• வ.உ.சி. பன்னூல் திரட்டு, வ.உ.சி. திருக்குறள் உரை, வ.உ.சி. 150 சிறப்பு மலர் மற்றும் மடிப்பேடு வெளியீடு!**

**• வ.உ.சி. அவர்கள் எழுதிய நூல்கள், கையெழுத்துப் பிரதிகள் மின்னுருவாக்கம் செய்யப்பட்டு சிறப்பு இணையப் பக்கம் உருவாக்கம்!**

**• 1908 திருநெல்வேலி எழுச்சிக்கு நினைவுச் சின்னம் அறிவிப்பு!**

**எனத் தம் உயிரையும் உணர்வையும் தமிழுக்காகவும் இந்திய விடுதலைக்காகவும் அளித்த தியாகத் திருவுருவான வ.உ.சி. அவர்களின் பெருமையை அனைத்து வகையிலும் போற்றி வரும் நமது திராவிட மாடல் அரசின் சார்பில் செக்கிழுத்த செம்மல் வ.உ.சி. அவர்களின் நினைவுநாளில் அவரை வணங்கிப் போற்றுகிறேன்! வாழ்க வ.உ.சி.!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

### கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின் சார்பில்

# பயிர்க்கடன், நகைக்கடன், மகளிர் சுய உதவிக்குழுக் கடன்கள் - ரூ.544 கோடி தள்ளுபடி!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!



*கள்ளக்குறிச்சி, நவ. 19 -*

கள்ளக்குறிச்சி நகராட்சி, தனியார் திருமண மண்டபத்தில் கூட்டுறவுத் துறையின் சார்பில் நடைபெற்ற 72வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவினை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (17.11.2025) திங்கள் கிழமை அன்று தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் மாவட்ட அளவிலான சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயங்கள் மற்றும் பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தலைமையில் நடைபெற்றது.

மேலும் இந்நிகழ்ச்சியில் ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க. கார்த்திகேயன், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர், தா.உதயசூரியன், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இதன் பின்னர் இந்நிகழ்ச்சியில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு பேசியதாவது:

இந்தியா முழுவதும் கூட்டுறவின் செயல்பாடுகளை சிறப்புடன் வெளிப்படுத்தவும், கூட்டுறவின் சேவைகளை மக்கள் அறியச் செய்யவும், ஒவ்வொரு ஆண்டும் முன்னாள் இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளான நவம்பர் 14 முதல் ஒருவார காலம் கூட்டுறவு வார விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில் நடப்பாண்டில் 72வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா தன்னிறைவிற்கான கருவிகளாக கூட்டுறவு சங்கங்கள் என்ற பிராதான கருப்பொருளில் தமிழ்நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது.

**மாணவ - மாணவிகளுக்கு பாராட்டு!**

அதன் அடிப்படையில் இன்றைய தினம் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 72வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்விழாவில் கூட்டுறவு வார விழா போட்டிகளில் வெற்றிபெற்ற பள்ளி மாணவ, மாணவியர்களுக்கும், கலை நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவ மாணவியர்களுக்கும், சிறந்த கூட்டுறவு சங்கங்கள், சிறந்த கூட்டுறவு நியாயவிலைக் கடை விற்பனையா ளர்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பாராட்டுக் கேடயங்களும் வழங்கப்பட்டது. இதேபோன்று கூட்டுறவுத் துறையின் சார்பில் 18 பயனாளிகளுக்கு ரூ.69,21,000/ மதிப்பீட்டில் பல்வேறு கடனுதவித் தொகைகளும் வழங்கப் பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 116 கூட்டுறவு சங்கங்களும், 10 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளைகளும் செயல்பட்டு வருகிறது. கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் 837 நியாய விலைக் கடைகளில், 4,45,000 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில் 15,223 குடும்ப அட்டைகளுக்கு 3 வாகனங்கள் மூலம் கல்வராயன்மலை பகுதியில் நியாயவிலைப் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

57,783 விவசாயிகளுக்கு ரூ.427 கோடி பயிர் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. 25,525 பயனாளிகளுக்கு ரூ.97.75 கோடி நகைக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. 1,478 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.16.38 கோடி கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு சுமார் ரூ.544 கோடி மதிப்பீட்டில் கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 15 முதல்வர் மருந்தகங்கள் செயல்பட்டு வருவதுடன், இம்மருந்தகங்களில் 20 சதவீதம் முதல் 90 சதவீதம் வரை தள்ளுபடி விலையில் மருந்துகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

கூட்டுறவு சங்கங்களில் விவசாயிகள் டெபாசிட் செய்யப்பட்டிருந்த தொகையை மீண்டும் திரும்பி வழங்கிட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது. இதேபோன்று கூட்டுறவுத் துறையில் இணைப் பதிவாளர்கள் கூடுதல் பதிவாளர்களாகவும், துணைப் பதிவாளர்கள் இணைப் பதிவாளர்களாகவும், கூட்டுறவு சார்புப் பதிவாளர்களை துணைப் பதிவாளர்களாக மாற்றியது முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞர் அவர்களின் ஆட்சியில் தான்.

**கூட்டுறவுத் துறையில் பல்வேறு திட்டங்கள்!**

தமிழ்நாட்டில் நுகர்வோர் வாணிபக் கழகம் என ஒரு கழகத்தை உருவாக்கியதும், பொதுவிநியோகத் திட்டத்தின்கீழ் துவரம் பருப்பு, பாமாயில், கோதுமை உள்ளிட்ட பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டதும், மாவட்ட ஆட்சித்தலைவர்கள் குடும்ப அட்டை வழங்கும் அதிகாரம் அளித்ததும், ஒன்றரை கி.மீ. தொலைவிற்கு 150 குடும்ப அட்டைகளுக்கு மேல் இருந்தால் ஒரு நியாய விலைக் கடை உருவாக்கப்பட்டதும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் தான். இதுபோன்று கூட்டுறவுத் துறையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டது.

முத்தமிழறிஞர்கலைஞர் அவர்களின் வழியில் இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் துறையில் தாயுமானவர் திட்டத்தின்கீழ் 60 வயதிற்கு மேற்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு அவர்களது இருப்பிடத்திற்கே சென்று பொது விநியோகத் திட்டப் பொருட்களை வழங்கி வருகிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு சங்கங்கள் வளர்ச்சியடைய வேண்டும் என்பதற்காக இதுபோன்ற பல்வேறு திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே கூட்டுறவுத் துறையில் பணியாற்றும் அனைவரும் சேவை மனபான்மையுடன் தொடர்ந்து பணியாற்ற வேண்டும் என பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் சி.பெ. முருகேசன், மாவட்ட வருவாய் அலுவலர் ரா.ஜீவா, விழுப்புரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இணைப் பதிவாளர் விஜய சக்தி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் இரா.புவனேஸ்வரி பெருமாள், கள்ளக்குறிச்சி நகர்மன்ற தலைவர் இரா.சுப்பராயலு, ஒன்றியக்குழுத் தலைவர்கள் அலமேலு ஆறுமுகம், மா.சத்தியமூர்த்தி, ந.தாமோதரன், ப.ராஜவேல், திலகவதி நாகராஜன், திருக்கோவிலூர் சரகத் துணைப்பதிவாளர் செ.குறிஞ்சி மணவாளன், கூட்டுறவுத் துறை அலுவலர்கள், கூட்டுறவாளர்கள், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் பயனாளிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கழக தலைவர் , முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக துணை பொதுச் செயலாளர் திருக்கோவிலூர் சட்டமன்ற உறுப்பினர் க.பொன்முடி மற்றும் மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி வழிகாட்டுதலின்படி, விக்கிரவாண்டி பேரூராட்சியில் உள்ள ஏரியில் நீர்வளத்துறை மற்றும் கனிமவளத்துறை இணைந்து ஆகாய தாமரையை அகற்றும் பணியினை சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா துவக்கிவைத்தார்.உடன் பேரூராட்சி தலைவர் அப்துல்சலாம் , நகரச் செயலாளர் நயினாமுகமது, துணை தலைவர் பாலாஜி, விவசாய அணி தலைவர் பாபு ஜீவானந்தம், வர்த்தகர் அணி ராஜபாண்டியன்,தொழிலாளர் அணி அரிகரன், கவுன்சிலர் சுதா, ஆனந்தி, வீரவேல், முத்து, துணை செயலாளர் சுரேஷ், மீசைஞானம், செல்வம், SM. சிவா, கங்காதரன், பாலகிருஷ்ணன், யுவராஜ், சுந்தர், சுகுமார் உள்ளிட்ட நகர கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## பால் நினைந்தூட்டும் தாயினுஞ்சாலப் பரிந்து நிற்கிறார்!



சங்கராபுரம் அருகே
தாய் தந்தையரை இழந்துபோன
நான்கு குழந்தைகளை
அரசே ஏற்றுக்கொள்ளும்
என்ற அறிவிப்பு
முதல்வர் மு.க.ஸ்டாலின் மீதுள்ள
சமூக மதிப்பை
மேலும் மேலும் உயர்த்தியிருக்கிறது

அரசாங்கம் என்பது
ஒரு நிறுவனமே ஆயினும்
அது ஈரமும் இதயமும் அற்ற
எந்திரமல்ல

ஒரு குடும்பத்திற்கான
குணக்கூறுகள்
உடையது என்பதற்கு
சாட்சி சொல்லும் ஆட்சியாளராக
முதல்வர் சிறந்து நிற்கிறார்;
பால் நினைந்தூட்டும்
தாயினுஞ்சாலப் பரிந்து நிற்கிறார்

“காற்றடித்தால்
அவன் வீடாவான்;
கடுமழையில்
அவன் குடையாவான்;
ஆற்றாதழுதால்
அழுத கண்ணீரை
அங்கே துடைக்கும் கையாவான்”
என்று கண்ணனுக்கு
எழுதிய பாட்டு வரிகள்
முதல்வர் என்ற அண்ணனுக்கும் பொருந்தும்

மக்கள் இந்த அறச்செயலை
மறக்க மாட்டார்கள்;
நெகிழ்ந்து புகழ்ந்து
மகிழ்கிறார்கள்

தொடரட்டும் நல்லாட்சி



**- கவிப்பேரரசு வைரமுத்து**

### முனைவர் பட்ட ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்து

# அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முனைவர் பட்டம்!

## திருச்சி தேசியக் கல்லூரி சான்றிதழ் வழங்கி பாராட்டு!

*திருச்சி, நவ. 19 -*

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தனது முனைவர் பட்ட ஆய்வுக்கட்டுரையை சமர்ப்பித்து, திருச்சி தேசியக் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாய் மொழித் தேர்வில் தேர்ச்சி பெற்றதையடுத்து புறத்தேர்வு பேராசிரியரால் முனைவராக அறிவிக்கப்பட்டார்.



தமிழக பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருச்சி பாரதிதாசன் பல்கலை.க்கு உட்பட்ட தேசியக்கல்லூரி விளையாட்டுத் துறையில் தனது முனைவர் பட்டத்துக்கான ஆராய்ச்சிக்கு பதிவு செய்து, அதற்கான முன்மொழிவை 2021 அக்டோபர் மாதம் சமர்ப்பித்தார்.

“பள்ளிக் குழந்தைகளின் உடல் திறன் செயல்பாட்டை இயந்திரக் கற்றல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கண்டறிதல் எனும் தலைப்பில் முனைவர் பட்ட ஆராய்ச்சிக்கான தகவல்களை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சேகரித்து, ஆய்வுக் கட்டுரையை தயாரித்தார். முனைவர் பட்ட வழிகாட்டியாக கல்லூரியின் உடற்கல்வி துறை இயக்குநர் டி.பிரசன்ன பாலாஜி இருந்தார். இந்நிலையில், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகவிதி முறைகளின்படி நேற்று முன் தினம் ஆய்வுக் கட்டுரைக்கான வாய்மொழித் தேர்வு தேசியக் கல்லூரியில் நடைபெற்றது.

இத்தேர்வுக்கு தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக் கழக பேராசிரியர் எஸ்.திருமலைக் குமார் புற த்தேர்வராக இருந்தார்.

அமைச்சரின் ஆய்வுக் கட்டுரை தொடர்பாக உடற்கல்வித் துறை நிபுணர்கள், விளையாட்டுத் துறை ஆர்வலர்கள், பார்வையாளர்கள் தரப்பிலிருந்து கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அன்பில் மகேஸ் பொய்யாமொழி பதில் அளித்தார்.

இதையடுத்து அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழிக்கு முனைவர் பட்டத்தை உறுதிசெய்து புறத்தேர்வு பேராசிரியர் சான்றிதழ் வழங்கினார் .